# පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
## பொலிஸ் ஊடகப் பிரிவு
## POLICE MEDIA DIVISION
14 වන මහල,සුහුරුපාය,බත්තරමුල්ල

| | | | |
|---|---|---|---|
| දිනය Date | 2026.08.07 පැය 1240 | දුරකථන අංකය Tel.NO | 011-2887973 |
| මගේ අංකය My NO | D/Media/Out//2026 | විද්‍යුත් ලිපිනය E-Mails | dir.media@police.gov.lk |


**සයිබර් තර්ජන වලට (Phishing and online scams) ගොදුරුවීම වැළැක්වීම සඳහා මහජනතාව තවදුරටත් දැනුවත් කිරීම.**

රථවාහන වැරදි වලට අදාලව වේග සීමා උල්ලංඝනය වන බවට ශ්‍රී ලංකා පොලිස් දෙපාර්තමේන්තුව මගින් යොමු කරන ආකාරයේ පණිවිඩයක් මෙම දිනවල සමාජ මාධ්‍ය ඔස්සේ පුද්ගලයින් වෙත යොමු වන බවට අධිවේගී මාර්ග කොට්ඨාසයේ අන්තර් හුවමාරු ඒකකය වෙත පැමිණිලි වාර්තා වී ඇත.

මෙම තත්ත්වය සැලකිල්ලට ගෙන, මහජනතාව මෙවැනි නොමඟ යවන සුලු පණිවිඩ සහ ඒ ආශ්‍රිත සයිබර් තර්ජන වලට (Phishing and online scams) ගොදුරු වීම වැළැක්වීම සඳහා පහත සඳහන් උපදෙස් අනුව ක්‍රියා කරන ලෙසට පොලිසිය වැඩිදුරටත් මහජනතාවගෙන් ඉල්ලා සිටී.

1. කෙටි පණිවිඩ (SMS), විද්‍යුත් තැපැල (Email) හෝ වෙනත් සන්නිවේදන යෙදුම් (Messaging apps) හරහා ලැබෙන සැකකටයුතු සබැඳි (Links) හා යොමු කරන ලද පණිවිඩ වල ඇති අන්තර්ජාල දිගු මත ක්ලික් කිරීමෙන් වැළකී සිටීම.
2. ඕනෑම සබැඳියක් (Link) විවෘත කිරීමට හෝ ඊට ප්‍රතිචාර දැක්වීමට පෙර, වෙබ් අඩවියේ නිවැරදිතාව සහ එවූ පාර්ශවයේ තොරතුරු (Sender details) හොඳින් පරීක්ෂා කර බැලීම.
3. හඳුනා නොගත් සබැඳි හෝ වෙබ් අඩවි හරහා පුද්ගලික තොරතුරු, බැංකු ගිණුම් විස්තර, OTP කේත හෝ මුරපද (Passwords) හුවමාරු කර ගැනීමෙන් වැළකී සිටීම.
4. තොරතුරුවල නිවැරදිතාව නිල පොලිස් මාධ්‍ය ප්‍රකාශන සහ රජයේ නිල වෙබ් අඩවි හරහා පමණක් තහවුරු කර ගැනීම.
5. සැකකටයුතු පණිවිඩ, වෙබ් අඩවි සහ සමාජ මාධ්‍ය සටහන් පිළිබඳව අදාළ බලධාරීන් වෙත වාර්තා කිරීම.
6. ආරක්ෂක අවදානම් අවම කර ගැනීම සඳහා ජංගම දුරකථන සහ මෘදුකාංග යෙදුම් (Applications) නිරන්තරයෙන් යාවත්කාලීන (Update) කර තබා ගැනීම.
7. හදිසි අවශ්‍යතාවයක්, තර්ජනයක් හෝ වහාම මුදල් ගෙවන ලෙස දන්වා ලැබෙන පණිවිඩ කෙරෙහි දැඩි ලෙස සැලකිලිමත් වීම.

ඉහත කරුණු අනුගමනය කිරීම මගින් මහජනතාව මෙවැනි අපහසුතාවයන්ට පත්වීම වැළැක්වීම අවම කර ගැනීමට හැකිවන අතර සයිබර් අපරාධ අවම කිරීමට විශාල පිටුවහලක් වනු ඇත.

මෙම තත්ත්වය පිළිබඳව මෙයට පෙර අවස්ථාවකදී ද මහජනතාව දැනුවත් කරන ලද අතර මහජනතාවගේ දැනගැනීම සඳහා ඉහත නිවේදනය සම්බන්ධයෙන් නැවතත් ඔබ මාධ්‍ය ආයතනය මගින් ප්‍රචාරයක් ලබා දෙන මෙන් කාරුණිකව ඉල්ලා සිටිමි.

පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය.

## சைபர் அச்சுறுத்தல்கள் (Phishing and Online Scams) தொடர்பில் பொதுமக்களுக்கு மீண்டும் விழிப்புணர்வு.

வாகனப் போக்குவரத்து விதிமீறல்களில், வேக வரம்பை மீறியுள்ளதாக தெரிவித்து, இலங்கை பொலிஸ் திணைக்களம் அனுப்பியதுபோல் தோற்றமளிக்கும் குறுஞ்செய்திகள் (SMS) அண்மைக் காலமாக சமூக ஊடகங்கள் மற்றும் பிற தொடர்பாடல் வழிகள் ஊடாக பொதுமக்களுக்கு அனுப்பப்பட்டு வருவதாக, அதிவேக நெடுஞ்சாலை பிரிவின் இடைமாற்று அலகுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந் நிலைமையைக் கருத்தில் கொண்டு, இவ்வாறான தவறாக வழிநடத்தும் செய்திகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சைபர் அச்சுறுத்தல்களான (Phishing and Online Scams) மோசடிகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, பொதுமக்கள் பின்வரும் ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு இலங்கை பொலிசார் கேட்டுக்கொள்கின்றனர்.

1. குறுஞ்செய்தி (SMS), மின்னஞ்சல் (Email) அல்லது பிற செய்தி பரிமாற்ற செயலிகள் (Messaging Apps) ஊடாக கிடைக்கும் சந்தேகத்திற்கிடமான இணைப்புகள் (Links) அல்லது இணைய முகவரிகளை திறக்கவோ, அவற்றைக் கிளிக் செய்யவோ வேண்டாம்.
2. எந்தவொரு இணைப்பையும் (Link) திறப்பதற்கு அல்லது அதற்கு பதிலளிப்பதற்கு முன், அந்த இணையதளத்தின் நம்பகத்தன்மையையும் அனுப்பியவரின் விபரங்களையும் (Sender Details) கவனமாக சரிபார்க்கவும்.
3. அறிமுகமில்லாத இணையதளங்கள் அல்லது இணைப்புகள் மூலம் தனிப்பட்ட தகவல்கள், வங்கி கணக்கு விபரங்கள், OTP குறியீடுகள், கடவுச்சொற்கள் (Passwords) போன்றவற்றை எக்காரணம் கொண்டும் பகிர வேண்டாம்.
4. தகவல்களின் உண்மைத்தன்மையை பொலிசாரின் உத்தியோகபூர்வ ஊடக அறிவிப்புகள் மற்றும் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளங்கள் மூலமாக மட்டுமே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
5. சந்தேகத்திற்கிடமான செய்திகள், இணையதளங்கள் மற்றும் சமூக ஊடகப் பதிவுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்கவும்.

6. பாதுகாப்பு அபாயங்களைக் குறைப்பதற்காக, உங்கள் கைப்பேசி மற்றும் மென்பொருள் செயலிகளை (Applications) எப்போதும் புதுப்பிக்கப்பட்ட (Updated) நிலையில் வைத்திருக்கவும்.
7. அவசர நிலை, அச்சுறுத்தல் அல்லது உடனடியாக பணம் செலுத்துமாறு கோரி வரும் செய்திகள் குறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்.

மேற்கண்ட ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் மூலம், பொதுமக்கள் இவ்வாறான இணைய வழி மோசடிகளில் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்க முடியும். மேலும், சைபர் குற்றங்களை குறைப்பதற்கும் இது முக்கிய பங்களிப்பாக அமையும்.

இது தொடர்பாக இதற்கு முன்னரும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டிருந்த நிலையில், பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மேற்கண்ட அறிவிப்பை மீண்டும் உங்கள் ஊடகத்தின் வாயிலாக பொதுமக்களுக்கு தெளிவுப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொலிஸ் ஊடகப் பிரிவு.